**CC.No**. 63/2024

**Date**: 19.02.2026

**எ. ம.சா.** 3. பரமசிவம், த/பெ. சிதம்பரம், புதுவயல்.
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

குறுக்கு விசாரணை

**1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு படித்துள்ளேன். எதிரி எனக்கு என்ன உறவு என்றால் எனது உடன்பிறந்த சகோதரியின் மகள் ஆவார். எதிரி அழைத்ததன் பேரில்தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் எதிரிக்கும் அவரது கணவருக்கும் சண்டை நடந்ததாக சொல்லியுள்ளேன் மேற்படி சண்டை நடந்த இடத்திற்கும் சாக்கோட்டை காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும். மேற்படி சம்பவம் தொடர்பாக இன்று வரை காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி சொல்லிதான் எனக்கு தெரியும். மேற்படி சம்பவம் எதிரிக்கும் அவரது கணவருக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனை என்றாலும், இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.**

**2) புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையிலான வரவு செலவுகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வழக்கு காசோலை படி பணம் திருப்பி செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.19 15:22:01 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)